# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## <u>மு.ஃப்லிஹா அரபு மன்றம்</u>

## ஆண்டறிக்கை (2013 – 2014)

எம் கல்லூரியின் மு.ஃப்லிஹா அரபு மன்றத்தின் துவக்க விழா 08.07.2013 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திருமதி S. மதுமதி I.A.S அவர்கள் வந்திருந்து விழாவினை சிறப்பித்தார்கள்.

மன்றத் தலைவியும், கல்லூரி முதல்வருமான முனைவர் திருமதி வே. சசிகலா M.A., M.Phil., Ph.d அவர்கள் முன்னிலையில் மு.ஃப்லிஹா அரபு மன்றத்தின் மாணவியர் செயலாளராக இரண்டாமாண்டு கணிதவியல் துறை மாணவி செல்வி M.A.K.J. ஆமினா உம்மாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

மாணவியர் துணைச் செயலாளராக முதலாமாண்டு கணிப்பொறி துறையைச் சார்ந்த செல்வி S. ஜீவைரிய்யா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மன்றத் துணை தலைவியாக அரபு விரிவுரையாளர் S.A.K. முத்து மொகுதூம் பாத்திமா M.A., M.A., M. Phil., அவர்கள் பொறுப்பேற்றார்.

- ❖ மு.ப்லிஹா அரபு மன்றத்தின் சார்பாக 05.07.2013 அன்று காலை 10 மணி அளவில் "நோன்பின் மாண்புகள்"என்னும் தலைப்பில் M.I. கதீஜத்துல் குபுரா ஆலிமா முஅஸ்க்கரிய்யா அரபு பேராசிரியை (முஅஸ்க்கர் மகளிர் அரபுக் கல்லூரி – காயல்பட்டணம்) அவர்கள் உரை நிகழ்த்தினார். மாணவிகளின் நோன்பு பற்றிய ஐயப்பாடுகள் தெளிவுப்படுத்தப்பட்டன.
- ❖ மு.ஃப்லிஹா அரபு மன்றத்தின் சார்பாக 02.08.13 அன்று காலை 9.45 மணியளவில் நோன்பு பெருநாள் நிகழ்ச்சியாக, "நோன்பின் அவசியம், அதன் பயன்கள், இறைவனின் கட்டளைகள் போன்ற தலைப்புகளின் பங்கு பெற்று பெருநாள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இவ்விழாவில் எம் கல்லூரி முதல்வரும் மன்றத் தலைவியுமான முனைவர் வே. சசிகலா M.A., M.Phil., Ph.d அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- ❖ மு.ஃப்லிஹா அரபு மன்றத்தின் சார்பாக 11.01.14 அன்று காலை 10 மணியளவில் எம் கல்லூரி பிராத்தனை அறையில் வைத்து நபிகள் நாயகம் அவர்களின் "புகழ்மாலை" என்னும் மௌலிது ஷரீஃப் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனை தொடர்ந்து 11.30 மணியளவில் "இஸ்லாமிய பெண்கள் அன்றும் இன்றும்", "மாநகராட்சியின் மாண்புகள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் முஹம்மது ர.பீக் M.A., M.Phil கருத்தராவுத்தர் கௌதிய்யா கல்லூரி உத்தமபாளையம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

இவையே இவ்வருடம் மு.ஃப்லிஹா அரபு மன்றத்தின் சார்பாக நடந்த நிகழ்ச்சியின் தொகுப்பாகும்.